**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.31/2024 & SC.No.43/2024 & SC.No. 56/2024 - PW- 6**

| | |
|---|---|
| Name | திரு.சூர்யா (எ) சூர்ய நாராயணன் |
| Husband/Father Name | குமார் |
| Village /Area | அரக்கோணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 33 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 08.10.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 18.05.2015 அன்று மதிய வேளையில் நான் வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது எனது நண்பர் பாலாஜீயை போலாச்சியம்மன் பள்ளி, அரக்கோணத்தில் குத்திவிட்டதாக தகவல் தெரிவித்தார்கள் நான் இது சம்பந்தமாக அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் செல்வதற்கு முன்பே எனது நண்பர் பாலாஜீயை சென்னை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து சென்றுவிட்டனர். நான் உடனடியாக இரயிலில் சென்னை சென்று அரசு மருத்துவமனைக்கு சென்றேன். சென்னை அரசு மருத்துவமனையில் நான் இருந்த போது எனது நண்பர் மோகன் என்பவர் வெட்டுக்காயங்களோடு ஆம்புலன்சில் வந்து கொண்டிருப்பதாக தகவல் தெரிவித்தனர். அவர் பூந்தமல்லி தாண்டி ஆம்புலன்சில் வந்து கொண்டிருக்கும் போதே இறந்து விட்டதாக

எனக்கு தகவல் தெரிந்தது. இறந்த மோகனின் உடலை சென்னை அரசு மருத்துவமனை பிணவறையில் வைத்திருந்தனர். பிணக்கூறாய்வு முடிந்த பிறகு மோகன் என்பவரின் உடலை ஒப்படைத்தார்கள். சம்பவம் குறித்து கொடுத்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்தில் மோகனையும் எனது நண்பர் பாலாஜியையும் யார் யார் அடித்தார்கள் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது. நான் பிணத்தை அடக்கம் செய்ய உதவியாக இருந்தேன். யார் யார் மேற்படி நபர்களை தாக்கினார்கள் என்று என்னிடம் கூறவில்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.08 18:33:00 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.